[1981 ஜனவரி 24

திருவிடைமருதூர் வட்டத்தில் குறுவை சாகுபடிக்கான விதை நெல் வழங்கல்

* வினா எண். 28—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகாவில் உள்ள அரசாங்க விதை டெப்போக்களிலும் ஒன்றிய வேளாண்மை டெப்போக்களிலும் குறுவை சாகுபடிக்கான நெல் விதைகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தட்டுப்பாடு நீங்க மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் சுமார் 900 டன்கள் குறுவை விதைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதை ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வெளி வருகின்ற புதிய ரக நெல் வித்துக்கள் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. விதை வித்துக்கள் அரசாங்க டெப்போக்களுக்கு வந்தவுடனேயே பெரிய விவசாயிகள், மிராசுதாரர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். எனவே, சிறு விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட புதிய ரக நெல் வித்துக்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ? இரண்டாவது வெளி மார்கெட்டிலே அதிக விலைக்கு நெல் விற்கின்றபோது அரசாங்க டெப்போக்களிலுள்ள நெல்லை வெளி மார்க்கெட்டிலே சில அதிகாரிகள் விற்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுத்து, சிறு விவசாயிகளுக்கு அப்பேர்ப்பட்ட நெல் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றிய புகார் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்தின் அடிப்படையில், நிச்சயமாக அரசு இதற்கு ஆவன செய்யும்.

புதிய விவசாயக் கிடங்குகள்.

*வினா எண். 29—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) புதிதாக விவசாய கிடங்குகள் ஆரம்பிக்க ரூ. 25 ஆயிரத்துக்கு விவசாயிகள் விதை வாங்கி இருந்தால்தான் ஆரம்பிக்கப்படும் என ஏதாவது நிபந்தனை உள்ளதா ?

(ஆ) அப்படியானால் மேற்படி நிபந்தனை தளர்த்தப் படுமா ?

1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) விவசாயப் பொருள்கள், பூச்சி மருந்துகளின் எதிர் பார்க்கப்படும் ஆண்டு விற்பனை மட்டுமின்றி,

(1) இப்பொருள்களை வாங்க வேண்டி விவசாயிகள் செல்லும்தூரம்;

(2) திறக்கப்படும் விவசாயக் கிடங்கு சேவை செய்யக் கூடிய விஸ்தீரணம் ;

(3) பயனடையக்கூடிய கிராமங்களின் எண்ணிக்கை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு வேண்டுமானபோது இந் நிபந்தனை தளர்த்தப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் புது நிபந்தனைகள் தளர்த்தப்படும் என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் 3 ஆண்டுகளாக இந்த கோரிக்கை வைக்கப்படுகிறது. 3 ஆண்டு களாக இது நிறைவேறவில்லை. எனவே இந்த நிபந்தனையைத் தளர்த்தி இந்த கோரிக்கையை கூடிய சீக்கிரத்திலே என்னுடைய தொகுதியிலே ஆத்தூரில் விவசாயக் கிடங்கு ஆரம்பிக்கப்படாத தால், இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதிதாக விவசாயக் கிடங்கு ஆரம்பிக்க வேண்டுமானால், அதன் பராமரிப்புச் செலவை ஏற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், வேளாண்மைத் துறை இயக்குநர் ஆகியோர்களின் சம்மதத்தைப் பெற்று பிறகு தான், அரசு ஆணை பிறப்பிக்க முடியும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இவர்கள் பக்கத்தில் பக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேர்களும் இணைந்து, இந்த கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, இந்த கோரிக்கையை அரசு ஆராயும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே விதை வித்துக்கள் அரசு பண்ணையிலிருந்து தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்றிருந் தாலும், சில அதிகாரிகள் தனியார்களிடம் ஒப்பந்தம் செய்து

கொண்டு, அவர்களிடமிருந்து இந்த விதை வித்துக்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது தவறான விதைகளை சில நேரம் வாங்கிக் கொடுக்கப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படித் தவறுகள் செய்யும் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைவித்துக்கள் வாங்கியிருந்தால்தான் விவசாய கிடங்குகள் துவங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் விவசாய கிடங்குகள் ஏற்படுத்தினால் தான் விதை வித்துக்களை வாங்கி வைப்பதற்கும், அவைகளைப் பாதுகாக்கவும் முடியும். அதனால்தான், பல்வேறு விதைக் கிடங்குகளில் விதை வித்துக்களுக்குப் பழுது ஏற்பட்டு, விவசாயிகள் அவைகளை வாங்கிக்கொண்டு போகும்போது, அவைகள் முளைக்காமல் போய்விடுகிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, ஆங்காங்கே விதைகளைப் பாதுகாக்கக்கூடிய கிடங்குகளை அமைத்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இப்போதே தமிழகத்தில் மொத்தம் 800 விவசாயக் கிடங்குகள் இருக்கின்றன. தேவையை ஆராய்ந்து புதிதாகக் கிடங்குகள் திறக்க அரசு நிச்சயமாக முயற்சி மேற்கொள்ளும்.

திருப்பத்தூர் ஒன்றியப் பகுதியில் பாலங்கள்.

*வினா எண். 30—திரு. கு. சுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் சர்க்கரை ஆலையின் மூலம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆறுகளின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்காக அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டங்கள் உடன் செயல்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) ஆம். ரூபாய் 4.15 இலட்சம் செலவில் திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இராஜபாளையம் கிராமத்தில் பாம்பாறு குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்டு தற்போது வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.